மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 66 /2017**

தேதி : 30.03.2022

பெயர்: ஜெயராமன் (PW1)

**முதல் விசாரணை தொடர்ச்சி:** 30.03.2022

சாட்சி அனுமதியின்போில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறாா்.

12.11.2021 தேதியிட்ட எனது தகப்பனாா் வெங்கடேசனின் இறப்பு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன். (இந்த ஆவணம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட இறப்பு சான்றிதழின் ஆவணத்தில் தேதி 04.01.2011 என்று இருக்கிறது என்றும் தற்போது அசலாக தாக்கல் செய்துள்ள ஆவணம் 12.11.2021 என்று வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்டுள்ளது என்றும் மேற்படி இரண்டு ஆவணங்களிலும் வழங்கப்பட்ட தேதி மாறுபாடாக உள்ளதால் இந்த ஆவணத்தை மனுவின்மூலம் மட்டுமே தாக்கல் செய்யமுடியும் என்றும் குறிப்பாணைமூலம் தாக்கல் செய்ய முடியாது என்றும் ஆட்சேபணை தொிவிக்கப்பட்டது) இரண்டு ஆவணங்களையும் பாிசீலனை செய்தபோது இரண்டு ஆவணங்களிலும் உள்ள விவரங்கள் ஒன்றாகவே உள்ளன. வழங்கப்பட்ட தேதி மட்டுமே மாறுபாடாக உள்ளது. வழக்கு நடவடிக்கைகளில் காலதாமதத்தை தவிா்க்கும் பொருட்டு மேற்படி ஆவணம் குறிப்பாணைமூலம் பெறப்பட்டு பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.14 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. 10.07.2015 தேதியிட்ட நான் 1ம்பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பிற்கான ரீஜாய்ண்டா் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.07.2015 தேதியிட்ட நான் 1ம்பிரதிவாதிக்கு அனுப்பிய பதில்அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.08.2015 தேதியிட்ட நான் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பிற்கான ரீ ஜாயிண்டா் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞா் மூலம் அனுப்பிய ரீஜாய்ண்டா் அறிவிப்பின் சாா்வு நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீா்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.